00258

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 5
இறுதிப் பரீட்சை - 2021/2022
பகிரங்க சர்வதேச சட்டம் - **LWU3315/LLU5712**
காலம்: மூன்று (03) மணித்தியாலம்

திகதி: 20.01.2023 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

**வினாக்களின் எண்ணிக்கை எட்டு (08).**

**ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.**

1. "சர்வதேச சட்டத்தின் தோற்றுவாய் என்ற வகையில் சர்வதேச நியாய நீதிமன்ற சட்டத்தின் உறுப்புரை 38(1) மிக அதிகாரம் வாய்ந்த கூற்றொன்றாக பரந்தளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இங்கு கூறப்பட்ட தோற்றுவாய்களின் பதவணி தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதில் இந்த உறுப்புரை போதுமானளவு தூரம் செல்லவில்லை என்பது தெளிவாகிறது. உதாரணமாக, சர்வதேச நியாய நீதிமன்ற சட்டம் நடைமுறைக்கு வந்து எழுபது வருடங்கள் கடந்துவிட்ட போதிலும் வழக்காறு மற்றும் பொருத்தனைச் சட்டம் என்பவற்றுக்கிடையில் எது முதன்மை இடத்தைபெறும் என்ற வினா மிக்வும் குழப்பகரமானதாக உள்ளது."

   சர்வதேச சட்டத்தின் தோற்றுவாய்கள் என்ற வகையில் வழக்காறுகள் மற்றும் பொருத்தனை சட்டம் என்பவற்றின் முக்கியத்துவத்துடன் குறிப்பாக தொடர்புறுத்தி மேலே தரப்பட்ட கூற்றின் மீது கருத்துரைக்க.

   இயைபான தீர்ப்புச் சட்டத்துடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

   (20 புள்ளிகள்)

2. "சர்ச்சைக்குட்பட்ட விடயம் யாதெனில் உள்நாட்டு சட்டத்துடன் ஒப்பிடுகின்ற போது சர்வதேச விதிகளை மீறும் விடயங்கள் மீது உறுத்தங்கள் இல்லாமை மற்றும் சர்வதேச சட்டத்தினுடைய அமுலாக்கம் மற்றும் வினைத்திறன் போன்ற பிரச்சினைகளுடன் அவதானிக்கையில் சர்வதேச சட்டம் "சட்டம்" ஒன்றா என்ற வினா தொடர்ந்து நிலவி வருகின்ற ஒரு குழப்பமான விடயம் ஆகும்."

   *Peter Malanczuk, Akehurst's Modern Introduction to international Law*, 7th ed, p.5.

   சர்வதேச சட்டத்தின் சமகால பிரயோகத்துடன் தொடர்புறுத்தி மேலே தரப்பட்டுள்ள கூற்றின் வலிதுடைமையை நுணித்து மதிப்பிடுக.

   உமது விடைக்குரிய காரணங்களைத் தருக.

   (20 புள்ளிகள்)

3. இறைமை, சுய நிர்ணயம் மற்றும் அங்கீகாரம் என்பன அரச தகுதியில் மிக முக்கியமான தூண்களாகும். ஆரச தகுதியைக் கைக்கொள்வதில் மேலே தரப்பட்டுள்ள கூற்றில் குறிப்பிட்டப்பட்டுள்ள மூன்று தூண்களின் வகிபாகம் மற்றும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

சமகால அரச நடைமுறைகள் தொடர்பான உதாரணங்கள் மற்றும் இயைபான தீர்ப்புச் சட்டம் என்பவற்றின் உதவியுடன் உமது விடையை ஆதாரப்படுத்துக.

**(20 புள்ளிகள்)**

4. 1945 ல் இருந்து அரசுகளின் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரித்துள்ளது; அத்துடன் ஏனைய சர்வதேச செயற்பாட்டாளர்கள் தோன்றிவருவதும் படிப்படியாக ஆரம்பித்துள்ளது.அதே போன்று ஒரு நிறுவனம் சர்வதேச சமூகத்தின் ஒரு உறுப்பாண்மையா என இனங்காணுதல் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் அந் நிறுவனம் ஆளப்படுகிறதா போன்ற விடயங்களை தீர்மானிக்கும் எண்ணக்கருக்களும் நடைமுறைகளும் காலப்போக்கில் குறிப்பிடத்தக்களவு மாற்றமடைந்து வந்துள்ளது.

மேலே தரப்பட்டுள்ள கூற்று சர்வதேச சட்ட ஆளுமையின் பரிமாண வளர்ச்சியை சரியாக பிரதிபலிக்கிறதா? ஆராய்க.

உமது விடையை உரிய அதிகாரங்களுடன் ஆதாரப்படுத்துக.

**(20 புள்ளிகள்)**

5. ஒரு புறம் சர்வதேச பொறுப்புடைமை என்ற கோட்பாடு உள்ளக அளவில் உள்நாட்டு சட்டம் மற்றும் அரச இறைமை என்பவற்றுக்கிடையில் ஒரு அரங்காக பொருள்கோடல் செய்கின்ற அதே வேளை மறுபுறத்தில் சர்வதேச சட்டத்தின் எண்ணக்கருக்களை சாத்தியமான அளவில் யதார்த்தபூர்வமாக அமுல்ப்படுத்துவதை முக்கியமாக வலியுறுத்துதல் (ஒரு முக்கியமான பதவணி மட்டமாக) இறுதி இலக்காக அமைந்துள்ளது.

Dimitrovska, M, *The concept of International Responsibility of State in the International Public Law System*, Journal of Liberty and International Affairs, Vol.1, No.2,2015,p.2

மேலே தரப்பபட்ட கூற்றின் பின்னணியில் அரச பொறுப்புடைமை என்ற கோட்பாட்டின் எல்லை. மற்றும் பிரயோகத்தை பகுப்பாய்வு செய்க.

**( 20 புள்ளிகள்)**

**வினா இலக்கம் 6 மற்றும் 7 என்பன கீழே தரப்பட்டுள்ள சம்பவத்தின் அடிப்படையில் தரப்பட்டுள்ளன.**

"அமாரா" என்ற அரசும் "சமாரா" என்ற அரசும் தெற்கு மஞ்சள் கடலின் ரமா என்ற நீரிணையினால் (Strait) பிரிக்கப்பட்ட இரண்டு அண்டைய நாடுகளாகும். நீரிணையின் நடுப்பகுதியில் "விதுரா" என அழைக்கப்படும் ஒரு தீவு இருந்தது. தீவினையுடைய ஆட்புலமும் நீரினையும் தெற்கு மஞ்சள் கடலின் பிரதான கப்பல் பாதைகள் மற்றும் செல்வம் பொருந்திய மீன்பிடித் தளங்கள் ஆகியவற்றுக்கு அண்மையில் இருந்தது. சமாரா தீவுகளை நூற்றாண்டுகளுக்கு முன்னதாக மக்கள் அளவிட்டதாகவும் அத்தீவுகள் "*terra nullius*" (யாருக்கும் சொந்தம் அற்ற நிலம்) ஆக இருப்பதை கண்டுபிடித்ததாகவும் வாதிடுகிறது, இவ் வலயத்தில் சிவில் யுத்தம் ஒன்று நடைபெற்று முடிந்த பின்னர் " சமாரா" அரசு "விதுரா" என்ற

தீவு தனக்கு சொந்தமானது என பிரகடனப்படுத்தியது. இதே வேளை "அமாரா" அரசு "விதுரா" தீவு தனக்கு சொந்தமானது எனக் குறிப்பிடுவதற்கு ஆவண ரீதியான சான்றுகள் உள்ளதாக குறிப்பிடுகிறது. குறிப்பாக இந்த தீவு "அமாரா" அரசு மற்றும் "மதுரா" அரசு ஆகியவற்றுக்கிடையில் உள்ள "பரஸ்பர ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பு பொருத்தனை" என்பதற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த பொருத்தனைக்கு அமைவாக, அமாரா அரசு விதுர தீவினுடைய பாதுகாப்பு தொடர்பில் மதுரா அரசினுடைய உதவியை தேவைப்படுத்துகிறது.

இந்த தீர்க்கப்படாத ஆட்புலப் பிணக்கு 40 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் நீடித்திருப்பதுடன் இரண்டு அரசுகளும் வரலாற்று நிகழ்வுகளின் அடிப்படையில் இத்தீவினுடைய சொந்தத்தைக் கோருகின்றன. எனினும், விதுரா அரசினுடைய சொந்தம் தற்போது அமாரா அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. 23 நவம்பர் 2021 ல் அமாரா அரசு " தெற்கு மஞ்சள் கடல் வான் பாதுகாப்பு இனங்காணும் வலயம்" என்பதை உருவாக்கியது. இது விதுரா தீவை உள்ளடக்கியதுடன், இந்த வலயத்துக்குள் உட்பிரவேசிக்கின்ற அனைத்து விமானங்களும் விமான பிரயான திட்டத்தை கோப்பிடுவதுடன் வானொலி அதிர்வெண் அல்லது மாற்றுத்திறன் சக்தி இயந்திர தகவலை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அறிவித்தது. புதிதாக விதிக்கப்பட்ட இந்த ஒழுங்குவிதிகளுடன், விதுரா தீவு தொடர்பாக அமாரா மற்றும் சமாரா அரசுகளுக்கிடையில் இருந்த பிணக்கு மீள உருவெடுத்தது. 2021 டிசம்பரில் விதுர தீவினுடைய உரிமையை தமக்கு தராவிடில் தீவின் மீது தாம் தாக்குதல் நடத்த தீர்மானித்துள்ளதாக சமாரா அரசாங்கம் உத்தியோகபூர்வ கூற்று ஒன்றை வெளியிட்டது. இதேவேளை இயைபான உத்தியோகபூர்வ அறிவித்தல் வெளியிட்டதுடன், அமாரா அரசினுடைய வெளிவிவகார அமைச்சர், இந்த பிணக்கை தீர்ப்பதற்காக அமைதியான பேச்சுவார்த்தைகளை சமாரா அரசுடன் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்தார். எனினும், இந்த உத்தியோகபூர்வ அறிவித்தல் மீது எந்தவித பதிலும் கிடைக்கப்பெறாததுடன் சமாரா அரசாங்கத்தினால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அடுத்தகட்ட நடவடிக்கையாக சமாரா அரசு, அதனுடைய ஆட்புல எல்லையில் அதனுடைய ஆயுத படைகளை நிறுத்தியதுடன் அமாரா அரசை நோக்கி அதனுடைய யுத்த தாங்கிகளை குறிவைத்தது.

அமாரா அரசின் பேச்சுவார்த்தைகளுக்கான கோரிக்கை விடுக்கப்பட்டு இரண்டு வாரங்களுக்குப் பின்பு சமாரா அரசு விதுராவின் மீது குண்டு வைத்ததுடன் , 200 மீனவர்கள் கொல்லப்பட்டதுடன் "நுரை" என்ற கடற்கரை நகரத்தை கடுமையாக தாக்கினர். சமாரா இந்த தாக்குதல் மூலமாக சர்வதேச கடப்பாடுகளை மோசமாக மீறியுள்ளது என அமாரா அரசின் ஜனாதிபதி உத்தியோகபூர்வ அறிக்கையொன்றின் மூலம் கோரியதுடன், சர்வதேச சமூகம் தலையிட்டு சமாரா அரசிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரினார். மேலும் அமாரா அரசினுடைய ஜனாதிபதி சமாரா அரசில் இருந்து இன்னுமொரு தாக்குதலை எதிர்பார்ப்பதாகவும் அவ்வாறு இன்னுமொரு தாக்குதல் ஏற்படுவதற்கான அபாயம் இருப்பதாக தென்பட்டால் தனது நாடு தாக்குல் நடத்த தயங்காது எனவும் குறிப்பிட்டார்.

6. தரப்பட்ட சம்பவத்தில் அதிகாரத்தைப் பிரயோகித்தலுடன் (Use of Force) தொடர்புபட்ட சர்வதேச சட்ட எண்ணக்கருக்களை நீர் எவ்வாறு பிரயோகிப்பீர்?
சர்வதேச சட்ட தராதரங்கள், தீர்ப்புச் சட்டங்கள் மற்றும் சமகால உதாரணங்களை எடுத்துக்காட்டி அமாரா மற்றும் சமாரா மற்றும் மதுரா ஆகியவற்றினுடைய நடவடிக்கைகளை கருத்தில் எடுத்து உமது விடையை தயாரிக்குக.

**(20 புள்ளிகள்)**

7. அமாரா அரசின் வெளிவிவகார அமைச்சில் ஒரு சட்ட ஆய்வாளராக நீர் பணியாற்றுவதாகக் கருதுக. சமாரா அரசுடன் நிலவுகின்ற பிணக்கை தீர்ப்பதற்கு சர்வதேச சட்டத்தின் கீழ் இருக்கக்கூடிய பிணக்கு தீர்வு முறைகள் பற்றி அமாரா அரசின் ஜனாதிபதிக்கு அறிவுரை வழங்கி கருத்துரை ஆவணம் ஒன்றை தயாரிக்க. இயையான சட்ட அதிகாரங்களைக் குறிப்பிடுக.

(20 புள்ளிகள்)

8. இராஜதந்திர சிறப்புரிமையுடன் தொடர்புடைய சட்டத்தை தீவிரமாக திருத்துவதற்கான தேவையை உணர்ந்தமையே 1961 ஆம் ஆண்டின் இராஜதந்திர உறவுகள் தொடர்பான வியன்னா சமவாயம் உருவாக வழிவகுத்தது. எனினும், இராஜதந்திர சிறப்புரிமை அதன் எண்ணப்பட்ட மூல இலக்குகளுக்காகவா பயன்படுத்தப்படுகிறது என்பது இன்னும் விவாதத்திற்கு உட்பட்ட விடயமாக இருக்கிறது.

இராஜதந்திர சிறப்புரிமை தொடர்பான சர்வதேச சட்டத்தின் வரலாற்று ரீதியான விருத்தி மற்றும் இராஜதந்திர தூதுக் குழுக்களின் வினைத்திறனான பணிகளை உறுதிப்படுத்தும் தற்கால தேவை என்பவற்றின் பின்னணியில் மேலே தரப்பட்ட கூற்றை விமர்சித்து கருத்துரை செய்க.

(20 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*